# DEPOSTITION OF WITNESS
# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL
# O.S. No. 136 of 2020

**வா.சா: 2**

பெயர் : கந்தசாமி

தந்தை பெயர் :

கிராமம் :

வட்டம் :

தொழில் :

வயது :

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 20.09.2025.

**முதல் விசாரணை** :-

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது அகஸ்தீஸ்வரம் வட்டம் வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கேட்கப்பட்ட ஆவணம் ராஜாக்கமங்கலம் கிராமம் புதிய புல எண்.765/10-1 க்கு சம்மந்தப்பட்ட ஆவணம் கொண்டு வந்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் எனது அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்ட ஆவணம். வா.சா.ஆ.2 ஆவணம் கமலம் கணவர் பெயர் சுந்தரம் என்பவர் பெயருக்கு 1 ஏருக்கு கொடுக்கப்பட்டது.

மேற்படி 1 ஏர் வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முன்பாகவோ பின்போ கமலத்தை தவிர வேறு நபர்களுக்கு கொடுக்கப்படவில்லை.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**.

நான் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் வருவாய் ஆவணங்களை பரிசீலிப்பேன் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். வாக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 765/10. வழக்கு பட்டிகை சொத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை மண்டல துணை வட்டாட்சியர் பார்வையிட்டார். மண்டல துணை வட்டாட்சியர் பார்வையிட்டு அது சம்மந்தமான தகவல்களை என்னிடம் சமர்ப்பித்தார். வழக்கு பட்டிகை சொத்து ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளதா அல்லது தெற்கு பக்கம் உள்ளதா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்து பட்டா நிலமா அல்லது புறம்போக்கா இருந்து திருத்திக்கொடுக்கப்பட்டதா என்றால் வருவாய் வட்ட கணக்குகளில் வழக்கு சொத்தானது அரசு புறம்போக்காக குறிப்பிடப்பட்டுள்ளது.

புறம்போக்கு இடத்திற்கு பட்டா கொடுப்பதற்கு வழிமுறைகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழிமுறைகளில் ஒன்று கிராம நிர்வாக அலுவலர் யாருக்கு சொத்தை வழங்கவேண்டுமோ அவர்களை நேரடியாக விசாரித்து அது சம்மந்தமான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். பட்டா கேட்கும் நபருக்கு ஏற்கனேவ வேறு பட்டா நிலங்கள் இருக்கிறது என்றால் அவருக்கு பட்டா கொடுக்கலாமா என்றால் இலவசமாக கொடுக்க இயலாது வழிவகை இல்லை. வா.சா.ஆ.2 எங்கள் அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். பொதுவாக வா.சா.ஆ.2 போன்ற பட்டா

கொடுக்கும் சமயத்தில் அதனுடன் வரைபடம் ஒன்று கொடுப்போம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் பட்டா நிலத்தில் நான்கு புற எல்கைகள் தெரியுமா என்றால் பார்வையிட்டால் தான் தெரியும். வா.சா.ஆ.2 ன் பட்டா நிலத்தில் நான்கு புற எல்கைகள் தெரியுமா என்றால் தெரியாது.

வழக்கு பட்டிகை சொத்திற்கு உரிமையாளர் என்று கூறுவதற்கு வா.சா.ஆ.2 பட்டா மட்டும் போதுமா என்றால் நபந்தனையுடன் கூடிய பட்டா, நிபந்தனைகளை பின்பற்றாதபோது பட்டா ரத்து செய்து தகுதியான நபருக்கு கொடுக்கப்படும். அவ்வாறு ரத்து செய்து பிறநபருக்கு கொடுக்கும் சமயத்தில் ஏற்கனவே சொத்தினை கைவசம் வைத்திருக்கும் நபருக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்றால் இருந்தால் கொடுக்கவேண்டும் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. வாதி கமலத்தை விசாரித்ததற்கான ஆவணங்கள் இருக்கிறதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டா கொடுப்பது சம்மந்தமான ஆவணங்களை நிர்வகிக்கும் உரிமை யாரிடம் உள்ளது என்றால் வட்டாட்சியரிடம் உள்ளது. அப்படியானால் வாதி கமலத்திற்கு பட்டா கொடுக்கும் சமயத்தில் கொடுக்கப்பட்ட மனுக்களோ ஆவணங்களோ வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். வாதி கமலத்திற்கு பட்டா கொடுக்கும் சமயத்தில் கமலம் எந்த இடத்தில் வசித்து வந்தார் என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

கமலத்திற்கு சொந்தமாக இடம் உள்ளதாக கூறப்படும் ஆவணங்கள் ஏதேனும் அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் வாதியை விசாரித்து அதற்கான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் பெறுவதற்கு எங்கள் அலுவலகத்திற்கு மனு கொடுத்து பெறுவார்கள் என்றால் சரிதான் துணை வட்டாட்சியர் மூலம் பெறுவார்கள். வ.சா.ஆ.5 ன்

அடிப்படையில் சொத்து ஒருவருக்கு உரிமைப்பட்டது என்று கூற இயலுமா என்றால் இயலாது. வழக்கு பட்டிகை சொத்து 1986 ல் யாரிடம் இருந்தது என்றால் அரசு புறம்போக்காக இருந்தது. 1990 ல் யாரிடம் இருந்தது என்றால் தெரியாது. 1994 ல் யாரிடம் இருந்தது என்றால் ½ ஏருக்கு பட்டா கொடுக்கப்பட்டது. 2007 ல் யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் வாதி கமலத்திற்கு கொடுக்கப்பட்டது. 2005 ல் யாரிடம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. 2012 ல் யாரிடம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. 1994 ல் அழகம்மைக்கு பட்டா கொடுக்கப்பட்டது மேற்படி பட்டாவின் நகல் அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. 2007 க்கு முன்பாக யாரேனும் வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து நிலவரி ரசீது கட்டியிருக்க வாய்ப்பு உள்ளதா என்றால் இருக்கலாம்.

அவ்வாறு வழக்கு பட்டிகை சொத்தில் ஏதேனும் நபர் இருந்திருந்தால் நாங்கள் பி மெம்மோ கொடுத்திருப்போம் என்றால் சரிதான். பி மெம்மோ கொடுத்த பின்பு அதே நிலத்தை வேறு நபருக்கு பட்டா கொடுப்போமா என்றால் கொடுப்போம். அவ்வாறு பட்டா கொடுக்கும் சமத்தில் ஏற்கனவே பி மெம்மோ கொடுத்திருக்கும் நபருக்கு அறிவிப்பு கொடுப்போமா என்றால் கொடுப்போம். வழக்கு பட்டிகை சொத்து 765/10 ல் எத்தனை உட்பிரிவுகள் உள்ளது என்றால் வட்ட ஆவணங்களின் படி உட்பிரிவு செய்யப்படவில்லை. வா.சா.ஆ.5 ல் புல எண். 765/10-1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது அது எதை குறிக்கிறது என்றால் தற்காலிகமாக உட்பிரிவு எண் கொடுக்கப்பட்டது அது வட்ட ஆவணங்களில் பதிவேற்றம் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல் புல எண். 765/10-1, 765/10-2 என்று வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களில் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

புல எண். 765/10 ல் சுமார் எத்தனை பிரிவுகள் பிரிக்கப்படலாம் என்றால் எத்தனை வேண்டுமென்றாலும் பிரிக்கலாம். 765/10 ன் மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 5.5 ஏர். மேற்படி 5.5 ஏருக்கான நான்கு புற எல்லைகள் என்ன என்றால் வடக்கு சர்வே எண்.99, கிழக்கு ரீசர்வே எண். 766, மேற்கு ரீசர்வே எண். 765/1E, தெற்கு ரீசர்வே எண்.765/1E. சர்வே எண். 766 ரோடு என்றால் சரிதான். மற்ற எல்லைகள் அனைத்தும் பட்டா நிலம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 என்ன ஆவணம் என்றால் எங்கள் அலுவலகத்தில் கொடுப்பதில்லை. வா.சா.ஆ.3 வருவாய் ஆவணம் இல்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கு கதவு எண் கொடுப்பது வருவாய் அலுவலகம் கொடுப்பது இல்லை என்றால் சரிதான். தற்போது வழக்கு பட்டிகை சொத்தில் யார் உள்ளார் என்று விசாரித்தோமா என்றால் வீட்டில் ஆள் இல்லை பூட்டுபோட்டு பூட்டியிருந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்த வாதி கமலம் முறையான ஆவணங்கள்தாக்கல் செய்யாமல் சட்ட விரோதமாக பட்டா பெற்றும் சொத்து வரி கட்டியும் வழக்கிற்காக தகவல் உரிமை பெறும் சட்டத்தின் கீழ்முறைகேடாக தகவல்களை பெற்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>மறு விசாரணை அனுமதிக்கப்பட்டதன் பேரில் மறு விசாரணை.</u>

நான் எந்த வருடத்தில் இருந்து அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன் என்றால் 2025 முதல். வாதி கமலத்தின் பெயரில் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் எனக்கு முன்பாக இருந்த வட்டாடசியரால் கொடுக்கப்பட்டது நான் என்னிடம் காட்டப்பட்ட ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலகத்தின் இலவச வீட்டுமனை பட்டா பதிவேடு ஆவணத்தின் அடிப்படையில் மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

இலவச வீட்டுமனை பட்டா என்றால் கமலத்திற்கு கொடுக்கப்பட்ட பட்டாவிற்கான ஆணை உள்ளது. **மேற்படி ஆணை அசல் பரிசீலிக்கப்பட்டு நகலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1994 ல் அழகம்மைக்கு பட்டா கொடுக்கப்பட்டதற்கான ஆணை உள்ளதா என்றால் உள்ளது. **மேற்படி அழகம்மைக்கு கொடுக்கப்பட்ட பட்டாவின் ஆணை அசல் பரிசீலிக்கப்பட்டு நகலுடன்ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1994 ல் அழகம்மைக்கு பட்டா வழங்கப்பட்ட போது வடக்கு பக்கம் வடக்கு பாகம் ரீசர்வே எண்.765/10-1 பழனிவேல் ராஜன் என்பவருக்கு கொடுக்கப்பட்டதாக ஆவணங்களில் உள்ளது என்றால் தெரியாது. அவ்வாறு இருப்பதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது இருக்கலாம். வழக்கு சொத்து 765/10 த்துக்கான அனேக ஆவணங்கள் நீதிமன்றத்தில் கொண்டு வரவில்லை என்றால் பட்டா அலுவலகத்தில் உள்ள கோப்புகள் இல்லை.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது</u>.